**தேதி :** 05.08.2025 **SC.No. :** 495/2023 PW :**2** வசந்தா

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி வடிவேல் எனக்கு உறவினர் என்றால் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். அவர் எனது சமூகத்தை சார்ந்தவர். சாட்சி பால்ராஜ் என்னுடைய தம்பி. என்னுடைய மகள் மாரீஸ்வரிக்கு இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பே திருமணமாகி விட்டது என்றால் சரிதான். அவர் வட்டாலூர், இராமநாதபுரத்தை வேல்முருகன் என்பவரை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் வசந்தன் வீடு இல்லை என்றால் சரிதான். அவருக்கு அடுத்த தெருவில் வீடு உள்ளது. அ.சா.ஆ.1 பத்திரம் என்னுடைய பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றும், யார் பெயரில் வாங்கப்பட்டது என்றும் எனக்கு தெரியாது என்றால் என் கணவர் பெயரில் வாங்கப்பட்டது. முன்பணம் ரூபாய் மூன்று இலட்சம் வாங்கியதாக சொல்லியுள்ளது எந்த தேதியில் என்றால் தேதி எனக்கு தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் முடிந்தது என்றால் ரூபாய் எட்டரை இலட்சத்திற்கு பேசப்பட்டது. எனக்கு வீடு இருப்பதற்கான ஆவணத்தை நான் காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். எதிரி வெட்டியதினால் என் உடம்பில் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் துணியில் பட்டது என்றாலும், கீழே பட்டது என்றாலும் சரிதான்.

இரத்தம் பட்ட ஆடையை போலீசாரிடம் ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். எனது சகோதரர் அதிமுக கட்சியை சேர்ந்தவர் என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. நான் மயக்கநிலையில் இருந்ததினால் என்னை மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் என்னுடைய கொழுந்தன் பையன்களும், தம்பி பையன்களும் 108 ஆம்புலன்சில் அழைத்து சென்றார்கள்.

என்னுடைய தம்பி மீது போலீசார் தாக்கல் செய்த வழக்கில் எதிரி சாட்சியம் அளித்ததின் காரணமாக முன் பகையினால், எனக்கு காய்கறி நறுக்கும் போது எழும்பும்போது, நிலைதடுமாறி அரிவாள்மனையில் விழுந்து அதனால் ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு எதிரி மீது பொய்யாக இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை தாக்கி ஏற்பட்ட காயத்தினால் என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. கைவிரல் துண்டானது. இடுப்பில் துணி உடுத்த முடியவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஒப்பந்த ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.05 19:38:58 +0530